அசல் வழக்கு எண்.203/2018 வா.சா.1 திலகம் க/பெ மணி

**<u>11.12.2023 - 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு கடன் தொகையான ரூ.1,00,000/-நான்தான் கொடுத்தேன். என் கணவர் விவசாய வேலை செய்து வருகிறார். நான் விவசாய கூலி வேலை மற்றும் ஏரி வேலைக்கு செல்வேன். எனக்கு 2 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. எனக்கு ஒரு மகன் உள்ளார். என் மகன் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். நானும், என் கணவரும் மட்டும்தான் விவசாய வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. வழக்கு கடனை நான் பழனி மற்றும் மற்றொரு நபருக்கு கொடுத்தேன். அந்த நபரின் பெயர் எனக்கு தெரியவில்லை. பணத்தை நான் ரொக்கமாக என் வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது பழனியும் அவரது மனைவி லட்சுமியும் உடன் வந்திருந்தார். நான் என் கணவருடன் தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

3. நான் கடன் கொடுக்கும்போது என் கணவர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. நான் கடன் கொடுத்த விவரம் என் கணவருக்கு கடன் கொடுத்து ஒரு மாதம் வரை தெரியாது. அதன் பிறகு நான் ரூ.1,00,000/- கடன் கொடுத்தாக என் கணவரிடம் சொன்னேன். பிரதிவாதி பழனி எங்கள் வீட்டிற்கு வந்து போவார் என்பதாலும் எங்கள் இனத்தை சேர்ந்தவர் என்பதாலும் அவரை தெரியும் பழனி என் கணவருக்கும் தெரிந்தவர் என்றால் சரிதான்.

4. பழனி என் கணவருக்கு தெரிந்தவர் என்றாலும் என் கணவருக்கு தெரியாமல்தான் பழனிக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். விவசாயத்தில் விளையும் பொருட்களை நானும் என் கணவரும் சேர்ந்து தான் கொண்டு போய் விற்போம். அவ்வாறு வரும் பணத்தை நாங்கள் பொதுவாக தான் வைத்திருப்போம் என்றால் சரிதான். அவ்வாறு பொதுவாக வைத்திருக்கும் பணத்திலிருந்து என் கணவருக்கு தெரியாமல் ரூ.1,00,000/- கடனாக கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல உண்மைதான்.

5. பழனி என்னிடம் கடன் வாங்கி சென்ற பிறகு எத்தனை மாதங்கள் வட்டி செலுத்தினார் என்றால் கடன் வாங்கிய பிறகு பழனி வீட்டிற்கும் வரிவில்லை வட்டியும் செலுத்தவில்லை எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கடனுறுதிச்சீட்டை தாமோதரன் என்பவர் எழுதி உள்ளார் என்றும் அந்த தாமோதரன் யார் என்றால் எனக்கு அவர் யார் என்று தெரியாது. பழனிதான் கடனுறுதிச்சீட்டை எழுதி எடுத்து வந்தார்.

6. பழனி என் முன்னிலையில் கையெழுத்து போட்டாரா என்றால் போட்டார். அதன்பிறகு அவரது மனைவி சாட்சி கையெழுத்து போட்டார் பழனி எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் ஒரு கையெழுத்து போட்டார். கடனுறுதிச்சீட்டில் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்ட மோகன் என்பவர் உறவினர் அல்ல. எங்கள் ஊரை சேர்ந்தவர்தான். கடனுறுதிச்சீட்டில் உள்ள விவரங்களை எனக்கு யார் படித்து காண்பித்தார்கள் என்றால் என் வழக்கறிஞர் தான் படித்து காண்பித்தார்.

7. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி பாரதி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாரதி என்பவர் எனக்கு யார் என்றே தெரியாது எனும்போது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரம் பற்றி எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்றால் நான் சென்று கேட்டபோது பாரதி என்பவர் தான் அடமானப்பத்திரம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தது பற்றிஎன்னிடம் சொன்னார்.

8. வழக்கு கடனுக்கு பின்னிட்டு என் கணவருக்கும் பழனிக்கும் பேச்சு வார்த்தை தொடர்ந்து இருந்தது என்றால் சரிதான். என்கணவர் பழனியிடம் வட்டி தொகை எதுவும்

பெற்றதாக சொல்லி உள்ளாரா என்றால் இல்லை. நான் பழனியிடம் ரூ.3/- வட்டி வீதம் வட்டி பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல .

9. பழனி என்னிடம் 2016ல் கடன் வாங்கினார் என்றும் 2 வருடங்கள் கழித்து 2018ல் வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பினேன் என்றால் சரிதான். இடைப்பட்ட இந்த 2 வருட காலங்கள் பழனி வட்டியாக எதுவும் செலுத்தவில்லை. நான் சொல்வது தவறு என்றும் கடன் வாங்கி ஒன்றரை வருடங்கள் வரை 3% வட்டி வீதம் மொத்தமாக ரூ.48,000/- என் கணவரிடம் பழனி செலுத்தி உள்ளார் என்றால் இல்லை. என் கணவருக்குதெரியாமல் நான் பழனிக்கு கடன் கொடுத்ததால் என் கணவர் பழனியிடம் பெற்ற வட்டி தொகையை என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு ரூ.48,000/- வட்டி செலுத்தி உள்ளதால் வழக்கு தொகையிலிருந்து ரூ.48,000/- கழித்து கொள்ள வேண்டுமென்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் கோரியுள்ள வட்டி பெறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

10. பிரதிவாதி பழனி விவசாய பொருட்களை தொழில் செய்வதால் நான் கோரியுள்ளவாறு 24% வட்டி கேட்க முடியாது என்றும் 6% வட்டி தான் கேட்க முடியும் என்றால் சரியல்ல.